# NANNERI

துறைமங்கலம்-சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

# நன்னெறி

மூலமும் உரையும்

387
3-53

காஞ்சிபுரம் தமிழ்ப்பண்டிதர்
T. C. பார்த்தசாரதி அய்யங்கார்
எழுதியது.

NANNERI
ULAKA NITI



அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட்] 1953 [விலை அணா 3

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

NANNERI
by
17 MAR 1956
MADRAS
SIVAPPIRAKACA SWAMIGAL

உ

கடவுள் துணை

துறைமங்கலம்
சிவப்பிரகாச சுவாமிகள்
அருளிச்செய்த

# நன்னெறி

(மூலமும் - உரையும்)

காப்பு

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

(பதவுரை) மின் - மின்னொளியை, எறி - வீசுகின்ற, சடாமுடி - சடாமுடியையுடைய, விநாயகன் - விநாயகக் கடவுளினுடைய, அடி - திருவடிகளை, தொழ - வணங்கினால், நன்னெறி - நன்னெறி என்னும் நூலிலுள்ள, வெண்பா - வெண்பா, நாற்பதும் - நாற்பதும், வருமே - (இடையூறில்லாமல்) வரும்.

(கருத்துரை) விநாயக வணக்கஞ்செய்யின், நன்னெறி என்னும் நூல் இடையூறிலலாமல் இனிதுமுடியும் என்பதாம்.

(குறிப்புரை) விநாயகன் - எழுவாய். வரும் - பயனிலை. [illegible] - ஈற்றசை.

## நூல்

என்று முகமனியம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசு
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ [வை
நாவிற் குதவு நயந்து. 1

([illegible]) பூவின் - பூவினால், பொலி - விளங்குகின்ற, குழலாய் - கூந்தலையுடையவளே!, தீது அற்றோர் - குற்றமற்றவராகிய பெரியோர்கள், என்றும் - யாதொருநாளிலும், முகமன் -

(தமக்கு) உபசாரவார்த்தைகளை, இயம்பாதவர் கண்ணும்-சொல்லாதவரிடத்திலும், பொருள் - (தமக்குக் கிடைத்த) பொருளை, சென்று - (தாமே) கொண்டுபோய், கொடுப்பர்-கொடுப்பார்கள்; (அதுபோல) பூ-அழகிய, கை-கையானது, புகழுமோ - (தன்னைப்) புகழ்தற்காகவோ, தன்று-தனக்குக் கிடைத்த சுவை-மதுரமாகிய உணவை, நாவிற்கு-நாவினுக்கு, நயந்து - விரும்பி, உதவும் - (கொண்டுபோய்க்) கொடுக்கும். (புகழ்தற்கன்று) எ-று.

O31,1K30;N J3

(க-ரை) பெரியோர் தங்களுக்கு உபசார வார்த்தைகள் பேசாதாருக்கும் தாமே தேடிப்போய்ப் பொருள் கொடுப்பர் என்பதாம்.

(கு-ரை) நீதற்றோர் - எழுவாய், கொடுப்பர் - பயனிலை, பொருள்-செயப்படு பொருள்.

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க-ஈசற்கு [பு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்
வில்லோன் மலரோ விருப்பு. 2

(ப-ரை) நல்நுதால்-நல்ல நெற்றியை யுடையவளே! மாசு அற்ற-குற்றம் தீர்ந்த, நெஞ்சு-மனத்தை, உடையார்-உடையவரது, வன்சொல்-கடுஞ்சொல்லும், இனிது-இனியதாகும்; ஏனையவர் - (குற்றம் பொருந்திய மனத்தை யுடையவராகிய) பிறர், பேசுற்ற - சொல்லிய, இன்சொல் - இனிய சொல்லும், பிறிது என்க - கொடியதாகும் என்று அறிவாயாக; ஈசற்கு-சிவபெருமானுக்கு, விருப்பு-விருப்பத்தைக் கொடுத்தது, நல்லோன் - நற்குணமுடையவராகிய சாக்கியநாயனார், எறிசிலையோ - (அன்போடு) எறிந்த கல்லோ? ஒண்-பிரகாசமுடைய, கருப்பு - கரும்பு, வில்லோன் - வில்லையுடைய மன்மதன், மலரோ - (அன்பின்றி எறிந்த) பூவோ? எ-று.

(க-ரை) மன நன்மையுடையோர் கடுஞ்சொல்லும் இன்பம் விளைக்கும்; மன நன்மை யில்லாதார் இன்சொல்லும் துன்பம் விளைக்கும் என்பதாம்.

(கு-ரை) நீ-தோன்றா எழுவாய், பிறிதெண்க-பயனிலை.

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க-தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து. 3

(ப-ரை) நெடு-நெடிய, தங்கக் குன்றினால்-பொன்மலையினாலே, செய்து அனைய-செய்தாற்போன்ற, கொங்கையாய்-ஸ்தனங்களையுடையவளே!, தங்கட்கு-தங்களுக்கு, உதவிலர்-உதவாதவர்களுடைய, கை-கையினின்றும், தாம் - தாங்கள், ஒன்று - ஒருபொருளை, கொள்ளின் - கொள்ளவேண்டினால், அவர்-அவர்களுக்கு, உரியவரால்-உரியவராலே, தாம்கொள்க-(அப்பொருளைத்) தாங்கள் கொள்ளக்கடவர்கள்; ஆவின்பால்-(தங்களுக்குக் கொடாத) பசுவினுடைய பாலை, கன்றினால்-(அப்பசுவுக்குரிய) கன்றைக்கொண்டு, கறந்துகொள்ப-கறந்து கொள்வார்கள் எ-று.

(க-ரை) தமக்கு உதவாதவரிடத்தில் ஒருபொருள் பெற வேண்டின், அதனை அவருக்கு உரியவரைக்கொண்டு பெறல் வேண்டும் என்பதாம்.

(கு-ரை) தாம் - எழுவாய், கொள்க - பயனிலை, ஒன்றை-செயப்படுபொருள்.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம்-பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 4

(ப-ரை) பிறர்க்கு - பிறருக்கு, உதவி-உபகாரம், செய்யார்-செய்யாதவருடைய, பெரும-மிகுந்த, செல்வம் - செல்வமானது, வேறு - வேறாய் இருந்தாலும், பிறர்க்கு - அயலாருக்கு, உதவி-உபகாரம், ஆக்குபவர் - செய்கிறவர்களுடைய, பேறு ஆம் - செல்வமாகும்; பிறர்க்கு - பிறருக்கு, உதவி-உபகாரம், செய்யா - செய்யாத, கரும் - கரிய, கடல் - சமுத்திரத்திலுள்ள, நீர்-நீரை, புயல் - மேகமானது, சென்று-

போய், முகந்து-கொண்டுவந்து, பிறர்க்கு-உலகத்தவர்க்கு, பெய்யாக் கொடுக்கும்-(மழையாகப்) பெய்து கொடுக்கும், (அதுபோல) பிறர்க்கு-பிறருக்கு, உதவி-சகாயம், செய்யார்-செய்யாதவரது, பெரும்-மிகுந்த, செல்வம்-செல்வமானது, வேறு-வேறாய் இருந்தாலும், பிறர்க்கு-அயலாருக்கு, உதவி-உபகாரம், ஆக்குபவர்-செய்வோர்களுடைய, பேறு ஆம்-செல்வமாகும்.

(க-ரை) உதவி செய்கிறவர் செல்வம் அன்னியருடையதே யாயினும், உபகரிப்போர் செல்வமாகவே கொள்ளப்படும்.

(கு-ரை) செல்வம்-எழுவாய், பேறும்-பயனிலை.

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்-பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். 5

(ப-ரை) பூ குழலாய்-பூக்களை முடித்த கூந்தலையுடையவளே, நெல்லின்-நெல்லினின்றும், உமி-உமியானது, சிறிது-கொஞ்சம், நீங்கி-விலகி, பழமைபோல-முன்போலவே, புல்லினும்-சேரினும், திண்மை-(அதுமுன் அதற்கு ஆதாரமாக இருந்த) வலிமை, நிலை-நிலைமையானது, போம்-கெட்டுப் போம்; (அதுபோல) நீக்கம்-பிரிவு, அறும்-அற்ற, இருவர்-இரண்டு சிநேகிதர்கள், நீங்கி-(பகைத்துச் சிறிதுகாலம்) நீங்கி, புணர்ந்தாலும்-கூடினாலும், நோக்கின்-பார்க்குமிடத்து, அவர்-அச்சிநேகிதரின், பெருமை-பெருமை, நொய்து ஆகும்-அற்பத்தன்மையதாகும்.

(க-ரை) பிரிந்துகூடும் சிநேகம் பழைய ஒற்றுமையை உடைத்தாய் இராது.

(கு-ரை) பெருமை-எழுவாய், நொய்தாகும்-பயனிலை.

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே-ஓதுகலை
யெண்ணிரண்டொன் றுமதிமுகத்தாய்! நோக்கருண்
கண்ணிரண்டு மொன்றையே காண. 6

(ப-ரை) ஓது - புகழப்பட்ட, எண் இரண்டு - பதினறு, கலை - கலைகளும், ஒன்றுப-சேர்ந்த, மதி-சந்திரன், என்-என்று சொல்லப்படும், முகத்தாய் - முகத்தை யுடையவளே!, கண் இரண்டும்-இரண்டு கண்களும், ஒன்றையே-(தமக்குள் வேறு படாமல) ஒரு பொருளையே, நோக்கல-ஒத்துப் பார்ப்பதை, காண்-நீ பார்; (அதுபோல) காதல-அன்புள்ள, மனையாளும்-மனைவியும், காதலனும் - நாயகனும், மாறு - (தம்முள்) மாறுபாடு, இன்றி - இல்லாமல, தீது - தீமை, இல-இல்லாத, ஒரு கருமம்-ஒரு தொழிலை, செய்ப-செய்வர்.

(க-ரை) கணவனும் மனைவியும் மனம் ஒருமித்துச் செய்யும் அறமே நிறைவேறும்.

(கு-ரை) மனையாளும், காதலனும் - எழுவாய், செய்ப-பயனிலை, தருமம்-செயப்படு பொருள்; தான், ஏ-அசைகள்.

கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி-விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கட லுண்ணப் படும். 7

(ப-ரை) முனிக்கு - முனிவர்களுக்கு, அரச-தலைவரான அகத்திய முனிவரது, கையில் - கையினால், முழங்கும்-ஒலிக்கின்ற, பனி - குளிர்ந்த, கடலும் - சமுத்திரமும், முகந்து-மொண்டு, உண்ணப்படும்-பருகப்படும், (அதுபோலப் புலவர்களே!) யாம் - நாம, கல்வியால் - கல்வி நிறைவினால், கடலே-சமுத்திரத்திற்கே, அனையம்-ஒப்பாவோம், எனும்-என்று நினைக்கின்ற, அடல்- வலிமையையுடைய, ஏறு - ஆண் சிங்கத்திற்கு, அனைய - ஒத்த, செருக்கு - கர்வத்திலே, ஆழ்த்தி - (உங்களை) அமிழ்த்தி, விடல்-விடாதீர்கள் ஏ-று.

(க-ரை) எத்துணைப் பெருங் கல்வியுடையவரும் செருக்கடைவாராயின், வல்லவர் ஒருவராலே தப்பாது வெல்லப்படுவர் என்பதாம்.

(கு-ரை) யாரும் - தோன்று எழுவாய், ஆழ்த்திவிடல்-பயனிலை.

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க-வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 8

(ப-ரை) வெள்ளம் - வெள்ளத்தை, தடுத்தல் - (கரை கட்டித்) தடுத்தல், அரிதோ - அருமையோ?, தடம் - விசாலமான, கரை - கரையை, பேர்த்து - உடைத்து, விடுத்தல் - (அவ் வெள்ளத்தை) வெளியே செலுத்தல், அரிதோ - அருமையோ?, விளம்பு - (நீ) சொல்; (தடுத்தல் அருமைபோல) உள்ளம் - மனத்தை, கவர்ந்து - தன் வசமாக்கி, எழுந்து - எழுந்து, ஓங்கு - வளர்கிற, சினம் - கோபத்தை, காத்துக்கொள்ளும் - அடக்கிக்கொள்கின்ற, குணமே - குணத்தையே, குணம் - நல்லகுணம், என்க - என்று அறியக்கடவாய் எ-று.

(க-ரை) கோபத்தைச் செய்தல் எளிது; கோபத்தை அடக்கல் அரிது. ஆதலின், அதை அடக்கலே பெருமை என்பதாம்.

(கு-ரை) நீ - தோன்றா எழுவாய்; விளம்பு - பயனிலை, தான் - அசை.

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்-பலியேல்
கடவுள் அவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. 9

(ப-ரை) பலி - (அன்பர்கள் செய்யும்) பூசையை, ஏல் - கொள்கிற, கடவுள் - சிவபெருமானுடைய, அவிர் - விளங்கும், சடைமேல் - சடையிலிருக்கிற, கட்செவி - பாம்பானது, படர் - (தன்முன் வந்த) பரந்த, சிறை - சிறகுகளையுடைய, அ - அந்த, புள் அரசை - கருடனை, பார்த்து - கண்டு, அஞ்சாது - பயப்படாது; (அதுபோல) மெலியோர் - வலிமையில்லாதவர், தாம் - தாம், வலியோர்தமை - வலியோரை, மருவில் - சேர்ந்தால், வலிய - பலமுள்ள, விரவலரை - பகைவர்களை, அஞ்சார் - (பார்த்து) பயப்படமாட்டார்கள் எ-று.

(க-ரை) பகைவர் வலிபவராயவிடத்து அவரினும் வலியவரைச் சேர்ந்தால் பயப்படார் என்பதாம்.

(கு-ரை) மெலியோர் - எழுவாய், அஞ்சார் - பயனிலை, விரவலரை-செயப்படுபொருள், ஏ- அசை.

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்-திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே நின்று. 10

(ப-ரை) திங்கள்-சந்திரனானவன், கறை இருளை-தனது களங்கமாகிய இருளை, நீக்க - நீக்குதற்கு, கருதாது - நினையாமல், மேல்நின்று- ஆகாயத்திலிருந்து, உலகில்-உலகத்திலே, நிறை-நிறைந்த, இருளை-இருளை, நீக்கும்-நீக்குவான்; (அது போல), விழுமியோர்-மேலோர், தங்குறை - தம் குறைகளை, தீர்வு உள்ளார் - நீக்குதலை நினையாராகி, பிறர்க்கு-பிறருக்கு, உறூஉம் - வந்த, வெங்குறை - துன்பமுள்ள குறையை, தளர்ந்து-மனந்தளர்ந்து, தீர்க்கிற்பார்-நீக்குவார்.

(க-ரை) மேலோர் தங்குறையை நீக்காது பிறர் குறையை நீக்குவர்.

(கு-ரை) விழுமியோர்-எழுவாய், தீர்க்கிற்பார்-பயனிலை, வெங்குறை-செயப்படுபொருள்.

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றி
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந்-துப்பிற் [யே
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு 11

(ப-ரை) சூறாவளி-சுழல் காற்றானது, போய்-சென்று, துப்பின் - (தன) வல்லமையினாலே, சிறுபுன் - இலகுவாகிய சிறிய, துரும்பு-துரும்பை, சுழற்றும்-(எடுத்துச்) சுழற்றும், (ஆனால் அந்தக் காற்றானது), கல்தூணை-கல்லாகிய கம்பத்தை, சுழற்றுங் கொல் - சுழற்றுமா? (சுழற்ற மாட்டாது); (அது போல), பொய்-பொய்யாகிய, புலன்கள் ஐந்தும்-ஐந்து புலன்

சலும், புல்லியர்பால் - மூடரிடத்து, அன்றி - அல்லாமல், மெய்ப்புலவர் தம்பால் - மெய்யறிவுடையவரிடத்தே, நோய்-துன்பத்தை, விளையா-செயயாவாம்.

(க - ரை) ஐம்புலன்களினால் மூடரேயன்றி மெய்யறிவுடையவர் துன்பம் அடையார் என்பதாம்.

(கு - ரை) புலன்கள் ஐந்து - சத்தம், பரிசம், ரூபம் இரதம், கந்தம் என்பனவாம். மெய்ப்புலவர் - எழுவாய், ஏ ஆய - அசை.

வருந்துமுயி ரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத லேனே புதுமை-திருந்திழாய்!
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. 12

(ப - ரை) திருந்து இழாய் - திருந்திய ஆபரணத்தை யுடையவளே!, வருந்தும் - வருந்துகின்ற, உயிர்-உயிரானது, ஒன்பான்-ஒன்பது, வாயில்-துவாரங்களையுடைய, உடம்பில்-உடம்பில், பொருந்துதலே-தங்குதலே, புதுமை-ஆச்சரியம் (நீங்குதல ஆச்சரியமன்று); (எப்படியெனில்), சீதநீர்- குளிர்ச்சியாகிய நீரானது, பொள்ளல-சில்லியையுடை , சிறுகுடதது-சிறிய குடத்திலே, நில்லாது - நிலலாமல், வீதலோ-ஒழுகிப் போதலோ (ஆச்சரியம்), நிற்றல் - (ஒழுகாமல்) நிறறலே, வியப்பு-ஆச்சரியமாகும்.

(க - ரை) ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே உயிர் நிற்றலுக்கன்றி நீங்குதலுக்கு ஆச்சரியம் அடைதல் பேதைமை என்பதாம்.

(கு-ரை) தான்-அசை.

பெருக்க மொடுசுருக்க-ம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோா-சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே! மதியின்
கலையளவு நின்ற கதிர். 13

(ப - ரை) மலை அளவு - மலைபோல, நின்ற - நிற்கின்ற, சுரக்கும்-(பால) சுரக்கும், முலைமாதே - ஸ்தனங்களையுடைய

பெண்ணே, மதியின்-சந்திரனுடைய, கதிர்-கிரணங்கள், கலை-(வளர்தலையும் தேய்தலையும் பொருந்திய) கலைகளின், அளவு-அளவாக, நின்ற-நிற்கின்றன; (அதுபோல), மேலோர்-பெரியோர், பெருக்கமொடு சுருக்கம் பெற்ற - வளர்தலையும் தேய்தலையும் பொருந்திய, பொருட்கு - செல்வத்திற்கு, ஏற்ப - இசைய, விருப்பமொடு-ஆசையோடு, கொடுப்பர்-கொடுப்பர்.

(க-ரை) பெரியோர் தாம் பெற்ற செல்வத்திற்கு ஏற்ப அதிகமாகவும் குறைவாகவும் கொடுப்பர் என்பதாம்.

(கு-ரை) மேலோர் - எழுவாய், கொடுப்பர் - பயனிலை, பொருளை-செயப்படுபொருள்.

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்-இலையால்
இரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 14

(ப-ரை) இரைக்கும் - ஒலிக்கின்ற, வண்டு - வண்டுகள், ஊதும் - ஊதுகின்ற, மலர் - பூக்களாலாகிய, ஈர்ங்கோதாய்-குளிர்ச்சி பொருந்திய மாலையையுடைய பெண்ணே!, மேரு வரைக்கும் - (எக்காலத்திலும் அசைவற்றிருந்த) மகாமேரு மலைக்கும், வளைவு - (ஒரு காலத்தில்) வளைவு, வந்தன்று - வந்தது; (ஆதலால்), தலையாயவர் - தலைமையாகிய அறிவையுடையவர், தொலையா-(எக்காலத்தினும்) அழியாத, பெருஞ் செல்வம்-பெரிய செல்வத்திலே, தோற்றத்தோம் என்று - பிறந்து இருக்கின்றோம் என்று, செருக்கு - செருக்கை, சார்தல்-அடைதல், இலை-இல்லை.

(க-ரை) எத்துணைப் பெருஞ் செல்வத்துக்கும் அழிவு வரும் என்று அறிந்து அடங்குவோரே அறிவுடையோர் என்பதாம்.

(கு-ரை) தலையாயவர்-எழுவாய், சார்தலில்லை - பயனிலை, செருக்கை-செயப்படுபொருள், ஆல்-அசை.

இல்லா னுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு-நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. 15

(ப-ரை) நல்லாய் - நற்குணமுடையவளே!, மொழி இலார்க்கு - பேச்சில்லாதவர்களாகிய ஊமைகளுக்கு, முது நூல் - பழமையாகிய நூல், ஏது-யாது பயனைச் செய்யும்?, தெரியும்-பார்க்கின்ற, விழி-கண், இலார்க்கு-இல்லாதவர்களாகிய (குருடர்களுக்கு), விளக்கு - தீபம், ஏது-யாது பயனைச்செய்யும்?; (அதுபோல) இங்கு - இவ்வுலகத்தில், அன்பு இல்லானுக்கு - அன்பில்லாதவனுக்கு, இடம் - இடமும், பொருள் - பொருளும், ஏவல்-ஏவலும் (ஆகிய), எல்லாம் - இவைகளெல்லாம், இருந்தும்-இருந்தும், அவற்கு-அவனுக்கு, என் செய்யும்-யாது பயனைச் செய்யும்.

(க-ரை) அன்பில்லாதவன் இடம், பொருள், ஏவல்கள் உடையவனாயினும், அவைகொண்டு தருமமும் புகழும் செய்துகொள்ள மாட்டான் என்பதாம்.

(கு-ரை) எல்லாம் - எழுவாய், என்செய்யும் - பயனில்லை மற்று-அசை.

தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தலைமையடைந்தோர்-தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல். 16

(ப-ரை) கடல் - (பெரிய) சமுத்திரமானது, அல்கு - (தன்னை அடுத்த) சிறிய, கழியினும்-உப்பங்கழியிலும், செல்லாதோ-போய்ப் பாயாதோ? (போய்ப்பாயும்); (அதுபோல), உயர்ந்தோர் - (அறிவு ஒழுக்கங்களினால்) உயர்ந்தவர்கள், தமை - தங்களை, அடைந்தார் - அடைந்தவர்கள், தம்மின் - தங்களைப் பார்க்கினும், இழியினும் - தாழ்ந்தவர்களாயினும், தம்மையும் - தங்களையும், தங்கள் - தங்களுடைய, தலைமையும் - தலைமையையும், பார்த்து-பார்த்து, தம்மை-தங்களை, மதி

யார் - மதியாதவர்களாகி, செல்வர் - (அவர்கள் இருக்கும் இடத்துக்குப்) போய், இடர்-(அவர்களுடைய) துன்பத்தை, தீர்ப்பர்-நீக்குவார்கள்.

(க-ரை) மேலோர் தம்மில் தாழ்ந்தவரையும் செருக்கு இல்லாமல் அவரிடம் தேடிச்சென்று பாதுகாப்பர் என்பதாம்.

(கு-ரை) கடல்-எழுவாய், செல்லாதோ-பயனிலை.

எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தாதம் மீகை மறுப்பரோ-பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. 17

(ப-ரை) பைந்தொடீ - பசும்பொன்னாலாகிய ஆபரணத்தையுடையவளே!, நின்று-(முன்னே அழிவில்லாமல) நின்று கொண்டு, பயன் - (பழமாகிய) பயனை, உதவி - கொடுத்து, நில்லா - (அதனாலே) அழிவையடைந்த, அரம்பையின்கீழ்-வாழைமரத்தின கீழ், கன்றும் - (நிற்கின்ற அதன் கன்றும், கனி-பழத்தை, உதவும - கொடுக்கும; (அதுபோல), எந்தை-எங்கள் பிதா, இரப்பார்க்கு-இரப்பவருக்கு, ஈந்து-கொடுத்து, நல்கூர்ந்தான் என்று - தரித்திரனானன் என்று, அவன் மைந்தர் - அவனுடைய புத்திரர், தம ஈகை - தமது தருமத்தை, மறுப்பரோ-விடுவாரோ? (விடார்).

(க - ரை) தந்தை கொடையினாலே தரித்திரனானன் என்று அவன் புத்திரர் கொடையை விடார் என்பதாம்.

(கு-ரை) கன்றும்-எழுவாய், உதவும்-பயனிலை, கனி-செயப்படுபொருள்

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே-பொன்செய் [ன்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணெ
கதிர்வரவாற் பொங்குங் கடல். 18

(ப - ரை) பொன்செய் அதிர்வளையாய் - பொன்னாலே செய்யப்பட்ட ஒலிக்கின்ற வளையல்களை யுடையவளே!,

கடல் - கடலானது, தண்என் - குளிர்ச்சி பொருந்திய, கதிர்-கிரணங்களையுடைய சந்திரன், வரவால் - வருகையினாலே, பொங்கும்-பொங்கும்; (அதுவன்றி), அழல்-சூடுபொருந்திய கதிரால்-கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலே, பொங்காது-பொங்காது; (அதுபோல), இருநீர்-பெரிய கடல்சூழ்ந்த, வியன் உலகம் - பரந்த உலகத்திலுள்ளவர், இன் சொலில்-இனிய சொல்லினால், அன்றி - அல்லாமல், வன் சொலால் - கடுஞ் சொல்லினால், என்றும்-எந்நாளும், மகிழாது-மகிழ்ச்சியடையார்.

(க - ரை) இன் சொல்லினாலன்றி வன் சொல்லினால் மகிழ்ச்சியடையார் என்பதாம்.

(கு-ரை) உலகம் - எழுவாய், மகிழாது - பயனிலை, ஏ-அசை.

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா னழுங்குவார்-வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. 19

(ப-ரை) தேமா-இனிமையான பழங்களையுடைய மாமரமானது, தென்றல்-தென்றற் காற்று, வா-வர, தளிர்காட்டி-தளிரைக்காட்டி, திருந்தும்-சிறப்புற்று இருக்கும்; சுழல்கால் வா - சுழல்காற்று வந்தால், வருந்தும் - வருத்தப்படும், வல்லோர் - (கல்வியறிவில) வல்லவர், நல்லோர் வரவால் - நல்லவருடைய வருகையினாலே, முகம் நகைகொண்டு-முகமலர்ச்சி கொண்டு, இன்பு உறீஇ - இன்பத்தை அடைந்து, அல்லோர் வரவால்-தீயவருடைய வருகையினாலே, அழுங்குவார் - துன்பத்தை அடைவார்.

(க-ரை) கல்வியறிவு உடையவருக்கு நல்லோர் வரவினாலே இன்பமும், தீயோர் வரவினாலே துன்பமும் விளையும் என்பதாம்.

(கு-ரை) வல்லோர்-எழுவாய், அழுங்குவர்-பயனிலை.

பெரியவர் தந்நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க-தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 20

(ப-ரை) தெரி இழாய்-ஆராய்ந்த ஆபரணத்தை யுடையவளே! கண்-கண்களானவை, மண்டு-நெருங்கிய, பிணியால்-வியாதியினால், வருந்து-வருந்துகின்ற, பிற உறுப்பை-மற்றை அவயவங்களை, கண்டு-பார்த்து, கலுழும்-அழும்; (அது போல), பெரியவர்-(அறிவு ஒழுக்கங்களில) பெரியவர், பிறர் நோய்-பிறருக்கு வந்த நோயை, கண்டு-பார்த்து, தம் நோய் போல்-தங்களுக்கு வந்த நோய்போல நினைத்து, உள்ளம்-மனம், எரியின-அக்கினியிலே பட்ட, இழுது ஆவர்-நெய் போல உருகுவார்.

(க-ரை) பிறருக்கு வரும் துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோருக்கு இயல்பாம் என்பதாம்.

(கு-ரை) பெரியவர்-எழுவாய், இழுதாவர்-பயனிலை.

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்-எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. 21

(ப-ரை) சுரநீர்-ஆகாய கங்கையினுடைய, மிகை-பெருக்கமானது, எழுத்து அறிவார்-எழுத்துக்களின் இயல்பை அறியும் பெரியோர், ஆயும்-ஆராய்கின்ற, கடவுள்-சிவ பெருமானின், அவிர்-விளங்குகின்ற, சடைமுன்-சடையைத் தன்முன், கண்ட அளவில்-பார்த்த அளவிலே, வீயும்-அடங்கும்; (அதுபோல), எழுத்து-இலக்கண நூலை, அறியார்-அறியாதவருடைய, கல்வி-(மற்றைக்) கல்வியினது, பெருக்கம்-மிகுதி, அனைத்தும்-முழுதும், எழுத்து-இலக்கண நூலை, அறிவார்-அறிந்தவரை, காணின்-கண்டபொழுது, இலை-இல்லாமற் போகும்.

(க-ரை) இலக்கண நூல் உணர்ச்சியில்லாதவருடைய கல்வி, இலக்கண நூல் உணர்ச்சியுடையார் எதிரே பயன் படாது என்பதாம்.

(கு-ரை) எழுத்தறிவார்- எழுவாய், இலேயாய்-பயனிலே, அனைத்தும்-செயப்படுபொருள். ஆர்-அசை.

ஆக்கு மறிவா னலது பிறப்பினுன்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க-நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு. 22

(ப-ரை) அரவின் - (நஞ்சையுடைய) பாம்பினிடத்தில் உண்டாகிய, பருமணி - பருத்த மாணிக்கத்தை, கண்டு - பார்த்து, நீக்குபவர் ஆர் - நீக்குவோர் யாவர்? (ஒருவரு மில்லே.) (ஆனல்), கடலின் - பாற்கடலினிடத்து உண்டாகிய, கடு-நஞ்சை, என்றும்-எந்நாளும், கவரார்-கொள்ளார். (ஆகை யால்), மீகொள் - மேலாகக் கொள்ளுகின்ற, உயர்வு - உயர் வையும், இழிவு - (கீழாகக் கொள்ளுகின்ற) இழிவையும், ஆக்கும்-(நற்குணங்களே) உண்டாக்குகின்ற, அறிவால-கல்வி யறிவினுல், அல்லால்-அல்லாமல், பிறப்பினுல்-சாதியினுலே, வேண்டற்க-விரும்பாதிருக்கக் கடவீர்.

(க-ரை) உயர் குலத்தானுயினும் அறிவில்லாதவனே இழிந்தவனுகவும், இழிகுலத்தானுயினும் அறிவுடையவனே உயர்ந்தவனுகவும் கொள்ளல்வேண்டும் என்பதாம்.

(கு-ரை) நீ-தோன்ரு எழுவாய், வேண்டற்க-பயனிலே.

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப-நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலேப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே. 23

(ப-ரை) பூரிக்கின்ற - விம்முகின்ற, முலேப்பேதாய் - ஸ்தனங்களேயுடைய பெண்ணே! பலகால்-பலதரம், எறும்பு ஊர - சிற்றெறும்புகள் ஊர்ந்துகொண்டு போவதால், கல்-

கருங்கல், குழியும்-குழிந்துபோகும்; (அதுபோல்), மடவார்-பெண்களிடத்தில், பகர்ச்சி - வாய்ப்பேச்சோடு, பயில் - (ஒருவன்) பழகிக்கொண்டு வந்தாலும், நோன்பு ஆற்றல் - தவத்தைச் செய்தலில், திகழ்ச்சிதரும்-விளங்குகின்ற, நெஞ்சத்திட்பம் - (அவன்) மனத்தின் உறுதியானது, நெகிழ்ச்சி பெறும்-(நாளுக்கு நாள) தளர்ந்துபோகும்.

(க-ரை) பெண்களிடம் வாய்ப்பேச்சோடு பழகினும், தவஞ்செய்வோனுக்கு மனவுறுதிகெடும் என்பதாம்.

(கு-ரை) நெஞ்சத்திட்பம்-எழுவாய், நெகிழ்ச்சிபெறும்-பயனிலை, ஏ-அசை.

**உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்**
**கொண்டு புகல்வதவர் குற்றமே-வண்டுமலர்ச்[ன்றோ**
**சேக்கைவிரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்**
**காக்கை விரும்புங் கனி.** 24.

(ப-ரை) மலர் சேக்கை-பூவாகிய மெத்தையை, வண்டு விரும்பும் - வண்டுகள் விரும்பும், செழும் - செழுமையாகிய, பொழில்வாய் - சோலையினிடத்தில், வேம்பு - வேப்பம்பழம், அன்றோ-அல்லவோ, காக்கை - காக்கைகள், விரும்பும் கனி-விரும்பும் பழமாகும்; (அதுபோல), இங்கு-இவ்வுலகத்திலே, ஒருவர்க்கு-ஒருவருக்கு, குணம்-நற்குணம், உண்டு எனினும்-உள்ளதாயினும், கீழ்-(அறிவில்) கீழோர், கொண்டு-எடுத்து, புகல்வது-சொல்வது, அவர் குற்றமே-அவர் குற்றமேயாகும்.

(க-ரை) ஒருவனிடத்து உள்ள நற்குணத்தையே மேலோர் எடுத்துப் பேசுவர்; தீக் குணத்தையே கீழோர் பேசுவர் என்பதாம்.

(கு-ரை) கீழோர்-எழுவாய், குற்றமேயாகும்-பயனிலை.

**கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த**
**நல்லார் தமதுகன நண்ணுமே-வில்லார்**
**கணையிற் பொலியுங் கருங்கண்ணாய்! நொய்தாம்**
**புணையிற் புகுமொண் பொருள்.** 25

(ப-ரை) வில் ஆர் கணையில்-வில்லோடுகூடிய அம்பைப் போல, பொலியும்-(புருவத்தோடுகூடி) விளங்குகின்ற, கருங் கண்ணாய்-கருமையாகிய கண்களை யுடையவளே!, புணையில்-(கனமில்லாத) தெப்பத்திலே, புகும்-சேர்ந்த, ஒள் பொருள்-கனமுடைய பொருள், கொய்து ஆம்-இலேசாகும்; (அது போல), கல்லா அறிவின்-கல்லாத அறிவையுடைய, கயவர் பால் - மூடரிடத்திலே (சேர்ந்தால்), கற்று உணர்ந்த-கற் றறிந்த, நல்லார்-நல்லோர், தமது கனம்-தமது பெருமையை, நண்ணார்-அடையார்.

(க-ரை) கற்று அறிந்தவர் மூடரிடத்தே சென்றால் தமது பெருமையை இழப்பர் என்பதாம்.

(கு-ரை) நல்லார்-எழுவாய், நண்ணார்-பயனிலை, கனத்தை-செயப்படுபொருள்.

**உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்**
**கடலின் பெருமை கடவார்-மடவரால்!**
**கண்ணளவாய் நின்றதோ காணுங்கதிரொளிதான்**
**விண்ணளவா யிற்றோ விளம்பு** 26

(ப-ரை) மடவரால் - இளம்பெண்ணே!, ஒள்புலவர் - ஒள்ளிய புலவருடைய, உடலின் சிறுமைகண்டு - சரீரத்தின் சிறுமையைக்கண்டு, கல்விக்கடலின்-(அதாவது) கல்வியாகிய கடலின், பெருமை கடவார்-பெருமையை (ஒருவரும்) கடக்க மாட்டார்; (அதுபோல), கதிர்-சூரியனுடைய ஒளியோடுகூடி, காணும் ஒளி - காண்கின்ற கருமணி யொளியானது, கண் அளவு ஆம்-(நம்முடைய) கண்ணுக்கு தோற்றம் அளவாய், நின்றதோ-நின்றதோ? விண் அளவு - (தான் காண்கின்ற) ஆகாயத்தின் அளவாக, ஆயிற்றோ-வியாபித்து நின்றதோ? விளம்பு-(நீ) சொல்வாயாக.

(க-ரை) உருவத்தால் சிறியவரும் அறிவினால் பெரிய வராயிருப்பர் எனபதாம்.

(கு-ரை) ஒண்புலவர் - எழுவாய்; கடவார் - பயனிலை; பெருமை-செயப்படுபொருள். தான் - அசை.

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. 27

(ப - ரை) முளைக்கும் - முளைக்கின்ற, எயிறு - பற்கள், நாவிற்கு - நாக்கிறகு, வலியன - வலிய தின்பண்டங்களை, தாம் - தாமே, மென்று - மென்று, முதிர்சுவை - நிறைந்த சுவையை, விளைக்கும் - உண்டாக்கும், (அதுபோல) கற்று அறிந்தோர் - படித்து அறிந்தவர்கள், கைம்மாறு - பிரதி உபகாரத்தை, உகவாமல் - விரும்பாமல், மெய்வருந்தி - சரீரம் கஷ்டப்பட்டு, தம்மால் - தங்களால், இயல் உதவி - கூடிய உபகாரத்தை, தாம் செய்வர் - தாங்களே செய்வார்கள்.

(க - ரை) அறிவிற் சிறந்த பெரியோர் பிரதி உபகாரத்தைக் கருதாமலே பிறருக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வர் என்பதாம்.

(கு - ரை) தாம் - எழுவாய், செய்வர் - பயனிலை.

முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. 28

(ப - ரை) கதலி - வாழையானது, நனி - மிகவும், விளைவு இல் - நன்றாக முற்றாக, காயினும் - காயாக இருந்தாலும், ஆகும் - உண்ண உதவும்; எட்டி - எட்டியானது, பழுத்து ஆயினும் - பழுத்திருந்தாலும், ஆமோ - உண்ண உதவுமோ? (உதவாது), அறை - நீ சொல்லுவாயாக, (அதுபோலவே) மூதறிஞர் - நல்ல புத்திசாலிகள், முனிவினும் - தாங்கள் கோபமுற்றபோதும், நல்குவர் - இல்லை என்னாது கொடுப்பர், கயவர் - அற்பர்கள் உள்ளம் - மனம், கனிவினும் - சந்தோஷமாய் இருக்கும்போதும், நல்கார் - கொடுக்கமாட்டார்கள்.

(க - ரை) அறிவுடையோர் தாங்கள் கோபமுற்றபோதும் இல்லை என்னாமல் கொடுப்பர். அற்பர் மனச் சந்தோஷமாய் இருந்தாலும் கொடுக்கமாட்டார்கள் என்பதாம்.

(கு-ரை) அறிஞர்-எழுவாய்; நல்கார்-பயனிலை.

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோ
ரடுக்கு மொருகோடி யாக-நடுக்குறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். 29

(ப-ரை) பண்ணின் - இராகம்போல, புகலும் - பேசுகின்ற, பனிமொழியாய்-குளிர்ந்த சொல்லுடைய பெண்ணே! மதிமான் - சந்திரனிலுள்ள மானது, மண்ணில - பூமியிலுள்ள, புலியை-புலிக்கு, அஞ்சுமோ-பயப்படுமோ? (பயப்படாது) (அதுபோல), நெஞ்சு-தமது மனம், ஓங்கு-உயர்ந்த, பரத்து - பரம்பொருளிடத்தே, உற்றோர் - பொருந்திய ஞானிகள், உடற்கு - (தம்) தேகத்திற்கு, வரும் இடர்-வரும் கஷ்டங்கள், அடுக்கும் - வரிசையாகச் சொல்லத்தக்க, ஒரு கோடி ஆக - ஒருகோடி அளவினவாக இருப்பினும், நடுக்கம்-பயத்தை, உறார்-அடையார்.

(க-ரை) கடவுளிடத்தில் தமது மனதைச் சதா வைத்துள்ள பெரியோர்கள் தமக்கு வரும் துன்பங்கட்குப் பயப்பட மாட்டார்கள் என்பதாம்.

(கு-ரை) உற்றோர்-எழுவாய்; உறார்-பயனிலை.

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுமுன்
னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே-வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. 30

(ப-ரை) வெள்ளம் - வெள்ளமானது, வருவதற்கு-வருவதற்கு முன்னே, அணை கோலி - கரையைக்கட்டி, வையார்-வையாதவர்கள், பெருகுதற்கண் - அவ்வெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது, என் செய்வார்-என்ன செய்வார்கள்?, பேசு - நீ கூறுவாயாக, (ஆதலால்) கொள்ளும் - உயிரைக் கொண்டுபோகும், கொடும் - கொடுமையான, கூற்றம்-எமன், கொல்வான்-(நம்மைக்) கொல்லும்படி, குறுகுதல் முன்-வருவதற்கு முன்னால், உள்ளம் கனிந்து - மனம் சந்தோஷித்து, அறம் செய்து-தருமங்களைச் செய்து, உய்க-பிழைப்பாயாக.

(க-ரை) சாவு வரும் காலம் இதுதானென்று அறிய முடியாதாகையால் அதற்கு முன்பே மனங்களிந்து தருமஞ் செய்தல் வேண்டும் என்பதாம்.

(கு-ரை) நீ-எழுவாய்; பேசு - பயனிலை.

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்-நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. 31

(ப-ரை) நேர் இழாய்-மேலான ஆபரணம் உடையவளே! மெய் சென்று-தேகத்திற் போய், தாக்கும்-தாக்குகின்ற, வியன்கோல-பெரிய கோலினுடைய, அடி-அடியை, கை-கைகள், கடிது சென்று-விரைவாய்ப் போய், தன் மேல்-தன் மீது, தாங்கும்-தாங்கிக்கொள்ளும், (அதுபோல) பேர் அறிஞர்-பெரிய அறிவுடையோர், தாக்கும்-துன்பப்படுத்துகின்ற, பிறர் துயரம்-பிறரது துக்கத்தை, வீரமொடு-வீரத்துடனே, தாங்கி-(தாம்) ஏற்றுக்கொண்டு, காக்க-அவரைப் பாதுகாக்க, விரைகுவார்-விரைவாகப் போவார்.

(க-ரை) அறிவால் சிறந்தவர் பிறருக்கு வரும் துன்பத்தைத் தாம் தாங்கி அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்பதாம்.

(கு-ரை) அறிஞர் - எழுவாய்; விரைகுவார் - பயனிலை.

பண்ணும் பனுவற் பயன்றே றறிவிலார்
மண்ணு மறங்கள் வலியிலவே-நன்னுதால்!
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். 32

(ப-ரை) நல் நுதால்-அழகான நெற்றியுடையவளே!, காழ் ஒன்று-வயிரம் பொருந்திய, உயர்-உயர்ந்த, திண் கதவு-வலிமையான கதவானது, தாழ் ஒன்று-தாழக்கோலொன்று, இலது ஆயின்-இல்லாவிட்டால், வலி உடைத்தோ-வலிமையை உடையதாகுமோ?, (ஆகாது) பண்ணும்-சொல்லுகின்ற, பனுவல்-நூல்களின், பயன் தேர்-பொருளை அறியத் தக்க, அறிவு-புத்தி, இல்லார்-இல்லாதவர்களது, மண்ணும்-

நிலைபெற்ற, அறங்கள் - தருமங்கள், வலி இலவே - உறுதி இல்லாதனவாம்.

(க - ரை) நூல்களில் உள்ள விஷயப் பொருள்களை ஆராய்ந்து அறியும் விவேகம் இல்லாதார் செய்யும் தருமங்கள் பயன் கொடா என்பதாம்.

(கு-ரை) இல்லார்-எழுவாய்; இல-பயனிலை.

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். 33

(ப - ரை) நீர் கட்டும் - தண்ணீரைக் கட்டிவைக்கும், குளம்-தடாகமே, தள்ளா - நீக்கப்படாத, கரை - கரையை, காப்பு உளது - காவலாக உடையதாய் இருக்கிறது, அன்றி- அல்லாமல், கடல்-பெரிய கடலானது, கரைகாப்பு உளதோ- கரையைக் காப்பாக உடையதோ? (இல்லை, அதுபோல) இழிஞர்-தாழ்ந்தோர், எள்ளாது - தம்மைப் பிறர் இகழாமல், இருப்ப - இருக்குமாறு, போற்றற்கு - காக்கப்படுவதற்கு, உரியர் - உரியவர்களாவார்கள், விள்ளா - நீங்காத, அறிஞர்- அறிவுடையோர், அது வேண்டார்-காக்கப்படுவதை விரும்ப மாட்டார்.

(க - ரை) அறிவில்லாதவரே தம்மைப் பிறர் இகழா திருக்கும்படி காத்துக்கொள்ளவேண்டும்; அறிவுடையோர் அப்படிச் செய்துகொள்ள வேண்டியதில்லை என்பதாம்.

(கு-ரை) அறிஞர் - எழுவாய். வேண்டார் - பயனிலை.

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறியர்—பிறைநுதால்! [க்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டு
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. 34

(ப-ரை) பிறை நுதால்-பிறைச் சந்திரனை ஒத்த நெற்றியுடைய பெண்ணே!, வண்ணம் செய்-அழகு செய்யும், வாள் விழியே-ஒளி பொருந்திய கண்களே!, அன்றி - அல்லாமல்,

மறைய - (ஒளி) மறைக்க, குருட்டுக் கண் - குருட்டுக் கண்கள், இருளை - இருட்டை, கண்டு - பார்த்து, அஞ்சுமோ - பயப்படுமோ (பயப்படாது,) (அதுபோல) அறிவு உடையோர் - ஞானமுடையவர்களே!, அறிவு - அல்லாத, அது - அந்த ஞானத்தை, பெறார் - பெறாத மூடர்கள், தம்பால் - தங்களிடம், சேர் - நெருங்கி வருகின்ற, பழியை - பழிக்கு, சிறிதும் - கொஞ்சமாயினும், அஞ்சார் - பயப்படமாட்டார்கள்.

(க - ரை) அறிவுடையோர் பழிக்கு அஞ்சுவர். மூடர்கள் ஒருபோதும் அதற்குப் பயப்படமாட்டார் என்பதாம்.

(கு - ரை) பெறார் - எழுவாய்; அஞ்சார் - பயனிலை.

கற்றவறி வினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்று மதியாரே - வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்
பால்வேண்டும் வாழைப் பழம். [காடி

(ப - ரை) வெற்றி - ஜயத்தைக் கொடுக்கும், நெடுவேல் - நெடிய வேலாயுதம், வேண்டும் - விரும்புகின்ற, வாள் விழியாய் - ஒளி பொருந்திய கண்களையுடையவளே!, வாழைப் பழம் - வாழைப்பழத்தை, பால் வேண்டும் - (இனிமையான) பாலனது விரும்பும், புளிங்காடி - புளித்த காடியானது, வேண்டாம் - (அப்பழத்தை), வேண்டா - அதை விரும்பாது, (அதுபோல) கற்ற - (நூல்களை) கற்ற, அறிவினரை - அறிவுடையோரை, மேன்மக்கள் - அறிவுடையோரே, காமுறுவர் - விரும்புவார்கள், மற்றையர் - அறிவில்லாத மூடர்கள், என்றும் - (அவரை) எக்காலத்தும், மதியார் - மதிக்கவே மாட்டார்கள்.

(க - ரை) கல்வியிற் சிறந்த அறிவுடையவர்களை அறிவுடைய மேன்மக்கள் விரும்புவார்கள் அறிவிலிமூடர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்பதாம்.

(கு - ரை) மேன்மக்கள் - எழுவாய்; காமுறுவர் - பயனிலை.

தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க்கு உதவார் விழுமியோர் - எக்காலும்

நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். 36

(ப - ரை) எக்காலும் - எப்போதும், நீர் - தண்ணீரை, நெல்லுக்கு - நெல் பயிருக்கு, இறைப்பதே அன்றி - இறைப்பார்கள் அல்லாது, காட்டு-காட்டில், முளி புல்லுக்கு-உலர்ந்துள்ள புற்களுக்கு, போய் இறைப்பரோ - இறைப்பவருமுண்டோ? (இல்லை), (அதுபோல) தக்கார்க்கே - தகுதியுள்ளவருக்கே, ஈவர் - கொடுப்பார், தகார்க்கு - தகுதியில்லாக்கு, அளிப்பார் - தருகிறவர், இல் என்று - இல்லையென்றெண்ணி, விழுமியோர்-மேலோர், மிக்கார்க்கு-கெட்டவர்க்கு, உதவார்-ஒன்றுங் கொடுக்கமாட்டார்கள்.

(க - ரை) அறிவு, ஒழுக்கம் உடைய மேலோர், தகுதியானவர்க் கல்லாமல மற்றவர்க்கு ஒருபகாரமும் செய்யார்.

(கு-ரை) விழுமையோர்-எழுவாய். உதவார்-பயனிலை.

பெரியோர்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழுந்-தெரியாய்கொல் !
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் ! விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து. 37

(ப-ரை) பொன் உயர்வு - இலக்ஷ்மிதேவியின் அழகின் சிறப்பை, தீர்த்த - போக்கிய, புணர் முலையாய் - நெருங்கிய தனங்களுடையாளே!, விந்தமலை - (நற்புகழுடைய) விந்த மலையானது, தாழ்ந்து - (அகத்தியரால் பாதாளத்திலே) தாழ்ந்து, தன் உயர்வு-தனது சிறப்பை, தீர்ந்தன்று - இழந்தது, தெரியாய் கொல் - நீ அதனை அறியாயோ? (அறிவாய், அதுபோல) பெரியோர் முன் - ஞானமுடைய பெரியோர் முன்னால், தன்னை - தன்னைப் பற்றி, புனைந்து - பெருமைப்படுத்தி, உரைத்த பேதை - பேசிய அறிவில்லான், உயர்வு-தன் னுயர்வை, தரியாது - பெறுமல், அகன்று - இழந்து, தாழும்-தாழ்வை அடைவான.

(க-ரை) ஞானமுடைய பெரியவர் முன் தன்னைப்பற்றிப் பெருமை பேசிக்கொள்ளும் சுயவர் மேன்மை அடையாமல் தாழ்மையை அடைவார்கள். என்பதாம்.

(கு - ரை) விந்தம் - வழுவாய்; தீர்ந்தன்று - பயனிலை.

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே-நல்லாய்கேள்
காயமுற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போயமுற்றி னென்னாகிப் போம். 38

(ப-ரை) நல்லாய் - நல்ல குணமுடையவளே!, கேள் - நான் சொல்வதைக் கேட்பையாக, காய் முற்றின் - (காலஞ் சென்று) காயானது முற்றினால், தின் தீம் - தின்னுவதற்கு இனிமையான, கனி ஆம்-பழமாகும், இளம் தளிர்-இளமையான துளிர், நாள் போய் - நாள் கடந்தபோய், முற்றின்-முற்றினால், என் ஆகி போம் - யாதாகிவிடும்?, (அதுபோல) நல்லார் - நல்லவர்கள், செய்யும் கேண்மை - செய்கின்ற சிநேகமானது, நாள் தோறும்-ஒவ்வொரு தினமும், நன்று ஆகும் - நன்றாக விருத்தியடையும், அல்லார் - கெட்ட குண முடையவர்கள், செய்யும் கேண்மை - செய்கின்ற சிநேகம், ஆகாது-நன்மை தராது.

(க - ரை) மேலோர் சிநேகம் எப்போதும் நன்மை தரும்; கெட்டவர் சிநேகம் எவ்வளவு பழகினும் நன்மை தாரமல் தீமையே கொடுக்கும் என்பதாம்.

(கு-ரை) நல்லார் - வழுவாய், ஆகும் - பயனிலை.

கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
யுற்றழியுந் தீமை நிகழ்வனவே-பொற்றொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம். 39

(ப - ரை) பொன் தொடி-பொன்னாலான வளையல்களை அணிந்தவளே!, சென்று படர்ந்த-வளர்ந்து படர்ந்த, செழும் கொடி-செழுமையான கொடியினது, மென் பூ-மென்மைதரும் பூவானது, மலர்ந்த அன்றே - பூத்த அன்றைத் தினமே மாத்திரமே மணம் உடையது ஆம் - வாசனை தருவதாகும், (பின் வாசனை போதல் போல) கற்று அறியார்-கல்வி மணமில்லா மூடர்கள், செய்யும் - செய்கின்ற, கடு நட்பும் - அதிகமான

சிநேகிதரும், தாம் - (வெகுகாலம்) தாங்கள், கூடி உற்ற - சேர்ந்து இருந்த, உழியும் - போதிலும், தீமை - கெடுதலை, நிகழ்வே - விளைதலையே, உள்ளது - உடையதாகும்.

(க-ரை) புஷ்பமானது பூத்தவன்றே வாசனையாக இருந்து வாடிப்போகின்றது. மூடர் நட்பு முதலில் நன்மை கொடுத்தாலும் பின் கெடுதியே கொடுக்கும் என்பதாம்.

(து-ரை) அறியார்-எழுவாய், உள்ளது-பயனிலை. தீமை-செயப்படுபொருள்.

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத் தாமொவ்வார்-மின்னு மணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். 40

(ப-ரை) பொன்னே - இலக்ஷ்மிதேவியை ஒத்தவளே!, மின்னும் அணி - பிரகாசஞ் செய்யும் நகைகளை, பூணும் - அணிந்துகொள்ளும், பிற உறுப்பு-கை, கால் முதலிய அவயவங்களானவை, அது புனையா - அதனைத் தரியாத, காணும் கண்-பார்க்கின்ற கண்களுக்கு, ஒக்குமோ - சமானமாகுமோ? (ஆகாது, அதுபோல) பொன் அணியும் - பொன்னாபரணங்களைத் தரிக்கும், வேந்தர் புனையா - வேந்தர்கள் பொன்னாபரணங்களைத் தரியாத, பெரு கல்வி-பெரிய கல்விச் செல்வம், மன்னும் - நிலையான, அறிஞரை - அறிவுடையவர்களை, ஒவ்வார்-ஒப்பாகார்.

(க-ரை) பெருஞ் செல்வமுடைய அரசர்களே ஆயினும், அவர்கள் கல்வியில் பெரிய வித்துவான்களுக்குச் சமானமாக மாட்டார்கள் என்பதாம்.

(து-ரை) வேந்தர்-எழுவாய்; ஒவ்வார்-பயனிலை.

நன்னெறி மூலமும்-உரையும்

முற்றிற்று.

மலர்மகள் லக்ஷ்மி பிரஸ், சென்னை.—1952.